**S.C.No. 129/2022 நாள் 15.09.2025 PW 2 – திரு. மாணிக்கராஜ்**

Accused is present.

(Crl.M.P.No. 1/2025 நாள் 16.07.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

20.11.2017 அன்று நான் மேற்கொண்டதாக சொல்லும் வாகன தணிக்கை நான் வாடிக்கையாக செய்த பணியா அல்லது மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் மேற்கொண்டேனா என்றால நான் வாடிக்கையாக மேற்கொண்ட பணி. 20.11.2017 அன்று நடந்த ரோல்காலிலேயே யார் யார் வாகன தணிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், எந்த இடத்தில் மேற்கொள்ள வேண்டுமென்றும் பணி ஒதுக்கப்படும் என்றால் பணி ஒதுக்கப்படும் ஆனால் இடம் பற்றி சொல்லப்படாது. நான் உட்பட உதவி ஆய்வாளர், அ.சா.1, ஆகியோர்கள் வாகன தணிக்கையில் இருந்தோம் என்பதை பொதுநாட்குறிப்பு, பணிஒதுக்கப்பட்ட Duty Roaster, பாக்கெட் நோட்புக் ஆகியவற்றில் துலங்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரிக்கும்போது பாக்கெட் நோட்புக்கை கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை, அதனால் கொடுக்கவில்லை. பாக்கெட் நோட்புக் என்பது நிலைய எழுத்தர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் பணிமாறுதல் வந்தால்தான் ஒப்படைப்போம். உயர் அதிகாரிகள் தணிக்கையின்போது ஒப்படைக்க வேண்டும் என்றால் கேட்டால் ஒப்படைப்போம். முதல்விசாரணையில் சொல்லியுள்ள நாளில் எதில் சென்றோம் என்றால் 3 இருசக்கர வாகனத்தில் சென்றோம். சிவந்திபட்டி விலக்கு என்பது கோவில்பட்டி – பசுவந்தனை பிராதான சாலையில் உள்ளது என்றால் கோவில்பட்டி – காமநாயக்கன்பட்டி சாலையில் உள்ளது. அது தென்வடல் சாலை என்றால் சரிதான். சாலையில் தணிக்கை எந்தபுறம் செய்து கொண்டிருந்தோம் என்றால் சாலையின் ஓரத்தில் பஸ்ஸ்டாப் உள்ளது அதில் தணிக்கை செய்தோம். சாலைக்கு கிழக்குபக்கமா, மேற்கு பக்கமா என்றால் கிழக்கு பக்கம். கிழக்கு பக்கம் பஸ்ஸ்டாப், முடுக்குகலான் சாலைக்கு வடக்கே 2 கடைகள், மற்றும் சாலைக்கு எதிர்புறம் சிவந்திபட்டி ஊர் குடியிருப்புகள் எல்லாம் இருக்கிறது என்றால் கடைகள் இல்லை, குடியிருப்பு பகுதிகள் உள்ளது. அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் சார்பு ஆய்வாளர் எழுதினார். தனிநபர்கள் யாரை சாட்சியாக கூப்பிட்டோம் என்றால் அந்த குடியிருப்பில் உள்ள 4 நபர்களை கூப்பிட்டோம். அப்படி அழைத்த நபர்களின் பெயர்களை அ.சா.1 சார்பு ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் இல்லை. அவ்வாறு அழைக்கப்பட்ட நபர்கள் யார் என்றால் எனக்கு தெரியாது. நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு நான் வாகன தணிக்கை இடத்திற்கு வந்தோம் என்றால் மதியம் 2.00 மணிக்கு சம்பவ இடம் வந்தோம். மதியம் 2.00 மணியிலிருந்து

3.00 மணிவரை எவ்வளவு வாகன தணிக்கை நடந்தது என்றால் சுமார் 20 முதல் 25 வாகனங்களை தணிக்கை செய்தோம். மோட்டார் வாகன தணிக்கை சட்டத்தின்போது வாகன தணிக்கையின்போத யார் யாரெல்லாம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் யார் யாரிடமெல்லாம் தலைகவசம் இல்லை என்று உதவி ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். எதிரியை பார்த்ததாக சொல்லக்கூடிய சமயத்திலும் வாகன தணிக்கையில் வாகனங்கள் எல்லாம் இருந்தது என்றால் இருந்தது. அவர்கள் எல்லாம் எந்த ஊர்க்காரர்கள் என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு தணிக்கைக்குட்படுத்தப்பட்ட விவரங்களையும் உதவி ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எதிரி சம்பவ இடத்திற்கு எதில் வந்தார்என்றால் நடந்துதான் வந்தார். எங்கிருந்து வந்தார் என்றால் 5 மீட்டர், 6 மீட்டர் தொலைவில் நடந்து வந்தார், எந்த திசையிலிருந்து வந்தார் என்றால் கிழக்கிலிருந்து முடுக்கலான்குளம் சாலையிலிருந்து வந்தார். தணிக்கை செய்த சிவந்திபட்டியில் அவருக்கு வீடு கிடையாது என்றால் அது பற்றி தெரியாது. முடுக்கலான்குளம் என்பது நாங்கள் தணிக்கை செய்த இடத்திலிருந்து 4 கி.மீ தொலைவு என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பிறப்பித்ததாக சொல்லக்கூடிய அத்தாட்சியில் எதிரி கையில் வைத்திருந்த வாளியின் அளவு, கைப்பற்றப்பட்ட வெடிகுண்டின் அளவு எழுதியிருந்தார் என்றால் வாளியின் அளவு எழுதவில்லை. வெடிகுண்டு சணலால் சுற்றப்பட்டிருந்ததா அல்லது நூலால் சுற்றப்பட்டிருந்ததா என்றால் வெள்ளை கலர் நூல், வாளி பச்சை கலர். கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய 2 வெடிகுண்டுகளும் என்ன நிறம்என்றால் வெள்ளைநிறம். இந்த விவரத்தையும் அத்தாட்சியில் உதவி ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் நூலின் நிறத்தை குறிப்பிடவில்லை. என்னுடைய பாக்கெட் நோட்புக்கில் இந்த பதிவுகளை எங்கு வைத்து பண்ணினேன் என்றால் காவல்நிலையம் சென்றபிறகுதான் எழுதினேன். அன்றையதினம் என்னுடைய கட்டளை அதிகாரி அ.சா.1 தான் என்றால் சரிதான். என்னுடைய பாக்கெட் நோட்புக்கில் விவரங்களை எழுதி அ.சா.1 டம் கையெழுத்து வாங்கினேனா என்றால் இல்லை. அன்றையதினம் எதிரியை பிடித்ததாக சொல்லக்கூடிய அன்று அவரை பிடித்த இடத்தில் வைத்து திரேக பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. வாகன தணிக்கையில் நாங்கள் ஈடுபட்டதாக சொல்வதையும், அ.சா.1 டன் நின்றுகொண்டதாக இருந்ததையும், அப்போது எதிரி வாளியுடன் வந்ததையும், எதிரியை கைது செய்ததையும் தனி அறிக்கை அ.சா.1 உதவி ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் தெரியாது. ரோந்து பணியிலோ, வாகன தணிக்கையிலோ இருக்கும்போது குற்றம் சம்மந்தமாக ஈடுபட்டதாக தகவல் வந்தால் உடனடினயாக உயர் அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அது பற்றி தெரியாது. எத்தனைமணிக்கு பொதுநாட்குறிப்பில் வரவு வைத்தோம் என்றால் அ.சா.1 தான் வரவு வைத்தார். நாங்கள் தணிக்கை பணிக்கு செல்லும்போது நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் ஞாபகமில்லை. 20.11.2017 ஆம் தேதி அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள காவலர்கள் எல்லாம் சிவந்தி முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் வாகன தணிக்கை ஈடுபட்டதாக

சொல்வதும், அங்கு ஆஜர் எதிரி பச்சை நிற பிளாஸ்டிக் வாளியில் 2 வெடிகுண்டுகள் வைத்துக்கொண்டு அந்த பகுதியில் வந்ததாக சொல்வதும் அவர் ஓட எத்தனித்ததாக சொல்வதும் அவரை பிடித்து நாங்கள் விசாரித்ததாக சொல்வதும், அவர் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அவரிடமிருந்து 2 நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் பிளாஸ்டிக் வாளியை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் அத்தாட்சி நிலையத்தில் வைத்து எங்களால் தயார் செய்யப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. அ.சா.1 உட்பட நாங்கள் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய பிளாஸ்டிக் வாளிக்கும், எதிரிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. காவல்கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்றும், அதனால்தான் தனிப்பட்ட சாட்சிகளை அத்தாட்சியில் கையொப்பம் பெற இயலவில்லை என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 129/2022 நாள் 15.09.2025 PW 3– திருமதி. சித்ரா**

Accused is present.

(Crl.M.P.No. 1/2025 நாள் 16.07.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

20.11.2017 அன்று வாகன தணிக்கையில் இருந்தோம் என்பதை பொதுநாட்குறிப்பு, பணிஒதுக்கப்பட்ட Duty Roaster, பாக்கெட் நோட்புக் ஆகியவற்றில் துலங்கும் என்றால் சரிதான். அன்றையதினம் கட்டளை அதிகாரி யார் என்றால் அ.சா.1. பாக்கெட் நோட்புக்கில் எத்தனை மணிக்கு போனோம், என்ன பணி மேற்கொண்டோம் என்ன பணி நடந்தது என்றும் எங்கள் கட்டளை அதிகாரியிடம் ஒப்பம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த பாக்கெட் நோட்புக்கை அ.சா.1 டம் ஆஜர்படுத்தினேனா என்றால் அவர் கேட்கவில்லை, அதனால் ஆஜர்ப்படுத்தவில்லை. வாகன தணிக்கை என்றால் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் போனோமா அல்லது மோட்டார் வாகன தணிக்கையில் விதிமீறல்கள் தணிக்கைக்கு சென்றோமா என்றால் SHO உத்தரவின்பேரில் சென்றோம். மோட்டார் வாகன சட்ட விதி மீறல்களை கண்டறிவதற்கும் அதற்கு அபராதம் விதிப்பதற்கும் சென்றோம் என்றால் சரிதான். அந்த தணிக்கையில் அபராதம் போடும் ரிஜிஸ்டர் எங்களது மாவட்ட காவல்கண்காணிப்பளார் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு தணிக்கைக்கு சென்றோம் என்றால் மதியம் 2.00 மணிக்கு. எத்தனை வாகனத்தில் சென்றோம் என்றால் ஞாபகமில்லை. எத்தனை வாகனத்திற்கு அபராதம் விதித்தார் என்றால் ஞாபகமில்லை. அத்தாட்சியில் வெடிகுண்டுகளின் தன்மை என்னஅளவு, என்ன நிறம், எதனால் சுற்றப்பட்ட வெடிகுண்டு என்று உதவி ஆய்வாளர் அத்தாட்சியில் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். எதிரியிடம் கேட்டு நாட்டு வெடிகுண்டு என்று எழுதினார். தனிநபர் சாட்சிகளை யார் போய் கூப்பிட்டார்கள் என்றால் நானும், மற்ற 4 பேரும் பக்கத்தில் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டோம், அவர்கள் கையெழுத்து போட மாட்டேன் என்றுசொல்லிவிட்டார்கள். அந்த வீடுகள் எல்லாம் எதிரியை கைது செய்ததாக சொல்லக்கூடிய இடத்திலிருந்து 50 அடி முதல் 100 அடி துாரத்தில் இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு போகும்போது எதிரியையும் கூட்டி சென்றோம் என்றால் சரிதான். அத்தாட்சி வீட்டிற்கு பக்கம் வைத்து எழுதப்பட்டது என்றால் இல்லை, எதிரியை கைது செய்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது. வாகன தணிக்கை ஈடுபட்டது, எதிரியை கைது செய்தது, எதிரியிடமிருந்து வெடிகுண்டை கைப்பற்றியது

ஆகியவை நாங்கள் தணிக்கை செய்த இடத்திலிருந்த மற்ற வாகன ஓட்டிகளுக்கும், அருகே உள்ள வீடுகளுக்கும் தெரியும் என்றால் இல்லை, வாகன தணிக்கை செய்துவிட்டு வாகனத்தை அனுப்பி விடுவோம். எதிரியை கைது செய்ததாக சொல்லக்கூடிய நேரத்தில் எத்தனை வாகன ஓட்டிகள் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் இல்லை. எதிரி இருசக்கரவாகனத்தில் வந்தார் என்றால் இல்லை, நடந்து வந்தார். எதிரிக்கு கைது செய்த இடத்திற்கு பக்கத்தில் வீடு கிடையாது என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் வீட்டில் உள்ளவர்களை கூப்பிட்டவர்களின் பெயர்களை உதவி ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் ஞாபகமில்லை. உதவி ஆய்வாளர் தயாரித்த அத்தாட்சியிலும் தனிப்பட்ட சாட்சிகளையும் அழைத்தோம் என்று எழுதியுள்ளார் என்றால் இல்லை. அ.சா.1 உதவி ஆய்வாளர் தணிக்கைக்கு செல்லும்போது நிலைய பொறுப்பு அதிகாரி யாரிடம் ஒப்படைத்து சென்றார் என்றால் நினைவில்லை. நிலையத்திற்கு சென்றபிறகு வேறு யாரெல்லாம் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் இல்லை. இந்த வழக்கில் தனிஅறிக்கை யார் எழுதினார் என்றால் உதவி ஆய்வாளர். தனி அறிக்கையில் என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த தனிஅறிக்கையை மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கும், காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. 20.11.2017 ஆம் தேதி அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள காவலர்கள் எல்லாம் சிவந்தி முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் வாகன தணிக்கை ஈடுபட்டதாக சொல்வதும், அங்கு ஆஜர் எதிரி பச்சை நிற பிளாஸ்டிக் வாளியில் 2 வெடிகுண்டுகள் வைத்துக்கொண்டு அந்த பகுதியில் வந்ததாக சொல்வதும் அவர் ஓட எத்தனித்ததாக சொல்வதும் அவரை பிடித்து நாங்கள் விசாரித்ததாக சொல்வதும், அவர் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அவரிடமிருந்து 2 நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் பிளாஸ்டிக் வாளியை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் அத்தாட்சி நிலையத்தில் வைத்து எங்களால் தயார் செய்யப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. அ.சா.1 உட்பட நாங்கள் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய பிளாஸ்டிக் வாளிக்கும், எதிரிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. காவல்கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்றும், அதனால்தான் தனிப்பட்ட சாட்சிகளை அத்தாட்சியில் கையொப்பம் பெற இயலவில்லை என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

S.C.No. 129/2022 நாள் 15.09.2025 PW 4– திரு.சரவணமுத்து

Accused is present.

(Crl.M.P.No. 4/2025 நாள் 29.08.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

20.11.2017 அன்று வாகன தணிக்கையில் இருந்தோம் என்பதை பொதுநாட்குறிப்பு, பணிஒதுக்கப்பட்ட Duty Roaster, பாக்கெட் நோட்புக் ஆகியவற்றில் துலங்கும் என்றால் சரிதான். பாக்கெட் நோட்டில் அன்றையதினம் பணிகளை எழுதியபின்பு அ.சா.1 டம் கையெழுத்து பெற்றேன் என்றால் இல்லை. வாகன தணிக்கைக்காக மோட்டார் வாகன விதிமீறல் அபராதம் போடும் ரீஜிஸ்டரை அன்றையதினம் எடுத்து சென்றிருந்தோம், அந்த ரீஜிஸ்டர் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்டது. நாங்கள் எடுத்து சென்ற ரிஜிஸ்டருக்கு சீரியல் நம்பர் உண்டு என்றால் சரிதான். எந்த சீரியல் நம்பர் போட்ட ரிஜிஸ்டரை, எந்த அதிகாரி, எத்தனை மணிக்கு, தணிக்கை செய்த வாகனங்களுக்கு எவ்வளவு அபராதம் விதித்தார்கள் என்று எழுதவேண்டும் என்றால் சரிதான். அன்றையதினம் எத்தனை வாகனங்களுக்கு அபராதம் போட்டப்பட்டது என்றால் ஞாபகமில்லை. ஆய்வாளர் எத்தனை வாகனங்களுக்கு தணிக்கை செய்யப்பட்டது என்றும், எத்தனை வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொண்டாரா என்றால் அ.சா1 டம்தான் கேட்டார். அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் அ.சா.1 தான் எழுதினார். எத்தனை கார்பன் நகல் வைத்து எழுதப்பட்டத என்றால் 3 கார்பன் நகல் வைத்து எழுதப்பட்டது. அதில் ஒன்று காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும், மற்றொரு காவல் கண்காணிப்பாளருக்கும், மற்றொன்று நீதிமன்றத்திற்கும் அனுப்பட்டது என்றால் சரிதான். எதிரியை பார்த்ததாக சொல்வது அவரை தடுத்து நிறுத்தி அவரிடம் விசாரித்ததாகவும், அவர் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அவரிடமிருந்து வாளியுடன் 2 வெடிகுண்டு கைப்பற்றியது ஆகியவற்றிற்கு எவ்வளவு நேரம் ஆகியது என்றால் ½ மணி நேரம் ஆகியது. எதிரியை கைப்பற்றியதாக சொல்லக்கூடிய இடம் கோவில்பட்டி– பசுவந்தனை செல்லக்கூடிய பிரதான சாலை என்றால் சரிதான். ½ மணிநேரத்தில் கோவில்பட்டிக்கு செல்கிறவர்கள், பசுவந்தனை செல்கிறவர்கள், எதிர்புறம் குடியிருப்பவர்கள், முடுக்கலான் குளம் செல்பவர்கள் ஆகியோர்கள் போய் வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். வாகன தணிக்கையிலும் வாகனங்கள் தணிக்கைக்கு நிறுத்தப்பட்டிருந்தது என்றால் அந்நேரத்தில் இல்லை. அப்படி அந்த வழியாக சென்றவர்களை உதவி ஆய்வாளர் சாட்சியாக அழைத்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அழைத்தவர்களின் பெயர், விவரங்களை எழுதிக்கொண்டார் என்றால் ஞாபகமில்லை. சிவந்திபட்டியில் குடியிருப்பவர்களை சாட்சிகளாக

அழைக்கும்போது வரமாட்டேன் என்று சொன்னவர்களின் பெயர்களை எழுதிக்கொண்டார் என்றால் நான் செல்லவில்லை. அத்தாட்சியிலும் எந்த எந்த தனிப்பட்ட சாட்சிகளை அழைத்தேன் என்றும், அவர்கள் வரமறுத்துவிட்டார்கள் என்றும் எழுதினார் என்றால் இல்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய வாளியின் அளவு, வெடிகுண்டுவின் அளவு சணலால் சுற்றப்பட்டுள்ளதா, அல்லது நூலால் சுற்றப்பட்டுள்ளதா என்று எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். அன்று நிலையத்தில் திரும்பி செல்லும்போது நிலைய பொறுப்பில் யார் இருந்தார் என்றால் நிலைய எழுத்தர் முருகராஜ் இருந்தார். நான் உட்பட மற்ற காவலர்களும் பொதுநாட்குறிப்பில் வரவு வைத்தோம் என்றால் சரிதான். எதிரியை பிடித்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு அருகில் வீடு கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு பின்னர் குண்டர் தடுப்பு சட்டம் போடப்பட்டது என்றால் சரிதான். இந்த குண்டர் தடுப்பு சட்டம் போடுவதற்காக உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20.11.2017 ஆம் தேதி அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள காவலர்கள் எல்லாம் சிவந்தி முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் வாகன தணிக்கை ஈடுபட்டதாக சொல்வதும், அங்கு ஆஜர் எதிரி பச்சை நிற பிளாஸ்டிக் வாளியில் 2 வெடிகுண்டுகள் வைத்துக்கொண்டு அந்த பகுதியில் வந்ததாக சொல்வதும் அவர் ஓட எத்தனித்ததாக சொல்வதும் அவரை பிடித்து நாங்கள் விசாரித்ததாக சொல்வதும், அவர் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அவரிடமிருந்து 2 நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் பிளாஸ்டிக் வாளியை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் அத்தாட்சி நிலையத்தில் வைத்து எங்களால் தயார் செய்யப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. அ.சா.1 உட்பட நாங்கள் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய பிளாஸ்டிக் வாளிக்கும், எதிரிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. காவல்கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்றும், அதனால்தான் தனிப்பட்ட சாட்சிகளை அத்தாட்சியில் கையொப்பம் பெற இயலவில்லை என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>